பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L
கணக்கியல்
90 Batch
Tue, Thu. 3-00 p. m.
89 பங்குடமை
Tue, Thu. 4-00—6-00 p.m.
திரு. மரியதாஸ்
எக்ஸ்பிரஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ 2/.

A/L
பொருளியல்
90 Batch
Tue, Thu. 4-00 p.m.
89 தேசிய வருமானம்
Tue, Thu. 3-00 p. m.
திரு. கிருஷ்ணனந்தன்
எக்ஸ்பிரஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு புரட்டாதி மீ 14 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 18 ( 30 - 09 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 197

அரசாங்க உத்தியோகத்தர்கள்

# தேர்தல் அலுவலர்களாக பணிபுரியப் பின்னடிப்பு

## இன்று கொழும்பில் முக்கிய மாநாடு

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 30

உத்தேச வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில், தேர்தல் அலுவலர்களாகப் பணிபுரிவதற்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் பலரும் பின்னடித்து வருகிறார்கள்.

தங்களால் அந்தப் பணியைச்செய்வது கஷ்டமாக இருக்கும் என்று அவர்கள் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப் போவதாக அறியவந்தது.

இதேவேளை நியமனப்பத்திரங்களை இன்னும் மூன்று தினங்களில் தாக்கல் செய்யவேண்டி உள்ளதால் அதில் ஏற்பட்டிருக்கும் தடங்கல்களை அகற்றுவது குறித்து ஆராய்வதற்காக இன்று கொழும்பில் விசேட உயர் மட்ட மாநாடு ஒன்றும் நடக்க இருப்பதாகவும் அறியவந்தது.

உத்தேச வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தேர்தல் அலுவலர்களாக கடமையாற்றும்படி வடபகுதியில் உள்ள பெரும் எண்ணிக்கையான அரச அலுவலர்களுக்கும் அரசு அறிவித்துள்ளது

இது தொடர்பான சுற்று நிருபங்களை தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த வாரம் அளவில் பிரஸ்தாப சுற்று நிருபங்கள் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் பிரதி பண்ணப்பட்டு சகல அரச திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன

இது தொடர்பாக சில அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்ட பொழுது "யாழ் செயலகம் இயங்காதிருக்கின்ற வேளையில் எமமால் எப்படி தேர்தல் அலுவலர்களாக கடமைக்குச் செல்ல முடியும்" எனக் கேட்டனர். அவர்களில் பலரும் தேர்தல் அலுவலர்களாகத் தங்களால் கடமையாற்ற முடியாது என அறிவிக்கப்போவதாகக் கூறினர்.

இதேவேளை சுற்று நிருபத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் இருந்து தேர்தல் அலுவலர்களாகச் செல்வோர் பூர்த்தி செய்து அந்தந்த மாவட்ட அரச அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அதில் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் யாவும் ஸ்ரீலங்கா படையினரின் பாதுகாப்பில் முகாம்களில் வைக்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

(ஒ-10)

## அரச எதிர்ப்பு சுலோகங்கள்

கொழும்பு, செப் 30

நாட்டின் தெற்குப் பகுதியில் இருந்து வரும் அரச வாகனங்களிலும் பஸ் ரயில் போன்றவற்றிலும் அரச எதிர்ப்புச் சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இவற்றில் ஜே ஆரை கண்டித்தும் மாகாண சபை எதிர்ப்புச் சுலோகங்களும் வடக்கு - கிழக்கு இணைப்பு எதிர்ப்புச் சுலோகங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. (ஒ-3)

## திருமலையிலும் காட்டுமரங்கள் வெட்டத்தடை

திருகோணமலை, செப் 30

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சகல காட்டுப் பிராந்தியங்களிலும் மரம் வெட்டுவதையும் வனவளங்களை அழிப்பதையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இம் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் தடை செய்துள்ளனர். (ஒ-150)

## ஆய்வுகூடம் உடைக்கப்பட்டு கொள்ளை

சொழும்புத் துறை மகா வித்தியாலய விஞ்ஞான ஆய்வு கூடம் இனந் தெரியாதோரால் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இச் சம்பவம் கடந்த 23ஆம் திகதி நடைபெற்றதாக வித்தியாலய அதிபர் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ-10)

## ஆவரங்காலில் மினி சினிமா இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 30

ஊரடங்குச் சட்ட நேரத்தில் படம் காட்டிய குற்றத்திற்காக மினிசினிமா நிலையம் ஒன்று யாழ். மாவட்ட மினிசினிமாச்சங்கத்தால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது,

யாழ். மாவட்ட மினிசினிமாச் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவரங்கால் பகுதி மினிசினிமா நிலையம் ஒன்றே 28ஆம் திகதியில் இருந்து ஒரு வார காலத்திற்கு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. (ஒ-5)

## எயிட்ஸின் வேகம்!

லண்டன், செப் 30

உலகில் நிமிடத்துக்கு ஒருவர் எய்ட்ஸ் நோயினுல் பீடிக்கப்படுகிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் இயங்கும் பனொஸ் இன்ஸ்டிடியூட் வெளியிட்டுள்ள அறிக்கையை ஆதாரங் காட்டி ஏ. எப். பி. செய்திஸ்தாபனம் இத் தகவலை வெளியிட்டது. (ஒ-எ)

**செய்திச் சாரம்**

## மீன்பிடிப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப 30

பிராந்திய கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் நடத்தப்படும் கடல் மீன்பிடி பற்றிய தேசிய சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பிராந்திய நிலையங்களில் தமிழ் மொழி மூலம் இந்த பயிற்சி நெறி நடைபெறும் என்றும்-

அக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்றும் 9-09-1988 ஆம் திகதிய வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க)

## நேற்று முதல் ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாண மாவட்ட ஆசிரியர்களின் செப்டெம்பர் மாதத்திற்குரிய சம்பளக் காசோலைகள் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

தபாற் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தமையினுல் வழமையான திகதியில் இதனை வழங்க முடியவில்லை எனவும் –

ஆசிரியர்களுக்கான சம்பளக் காசோலைகள் நேற்று நண்பகல் அளவிலேயே எழுதி முடிக்கப்பட்டன எனவும்—

எழுதி முடிக்கப்பட்டவுடன், நேற்று நண்பகல் தொடக்கம் காசோலைகள் வழங்கப்பட்டு வருவதாகவும்- கல்வித் திணைக்களக் கணக்காளர் திரு. ஆர். சுகுணதிரன் உதயனுக்குத் தெரிவித்தார் (ஒ-க)

## தமிழ்க்கைதிகள் கடிதம்

கொழும்பு, செப்.30

கொழும்பு, மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 84 தமிழ் அரசியல் கைதிகள், தமது விடுதலை தொடர்பாக குரல் எழுப்பியுள்ளனர்.

தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி அவர்கள் இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளரான டாக்டர் எஸ். ஜெயசங்கருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். [ஒ]

## வாகனங்கள் பலத்த சோதனை

யாழ்ப்பாணம், செப். 30

பரந்தன் முல்லைத் தீவுப் பாதையில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் பலத்த சோதனைக்குள்ளாசகப் படுகின்றன.

எட்டுக்கும் மேற்பட்ட இடங்களில் வாகனங்களில் இருந்து பயணிகளை இறக்கி சோதனை நடைபெறுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-க)

# கிட்டு கைது செய்யப்பட்டதை எதிர்த்து வழக்கு தாக்கலாகும்?

## தி.மு.க.எம். பி. அவருடன் சந்திப்பு

சென்னை, செப் 30

சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி கிட்டுவை தி மு. க. தலைவர் கருணநிதியின் ஆலோசனைப்படி தி மு. க. எம். பிக்கள் என். வி. என். சோமு வை. கோபால்சாமி ஆகிய இருவரும் சென்ற 23 ஆம்திகதி காலை 10 30 மணிககுச் சந்தித்துப் பேசினர்.

சந்திப்பு 10 30 மணிக்குத் தொடங்கி 11-30 மணி வரை நீடித்தது

தி மு. க. எம் பிக்களுடன் வழக்கறிஞர் கள் ராதாகிருஷ்ணன், வீரசேகரன், பூந்த நகர் இளைஞர் அணி அமைப்பாளர் பிரபாகரன் ஆகியோரும் சென்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



எய்ட்ஸும் விட்டு வைக்காமல் மின்னல் வேகத்திலை பரவுது எண்டு சொல்லுங்கோ பின்னை... அப்ப மரண வேகமும் அதே யாதிரிக் கூடும்தானே...!

## இளைஞர்கள் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

### வெவ்வேறு இடங்களில்

யாழ்ப்பாணம், செப் 30

மூன்று இளைஞர்கள் நேற்று வெவ்வேறு இடங்களில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்,

நல்லூர் மருதடி வீதியில் ஒருவரும் திருநெல்வேலி சிவன் கோவில் வீதியில் ஒருவரும், ஆனைக்கோட்டை, கூழாவடி தபாற் கந்தோரடியில் மற்றும் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

நல்லூர் மருதடி வீதியில் இறந்தவரின் பெயர் அந்தோனிப்பிள்ளை பேர்னுட் சுதாகரன் (வயது21 மருதடியைச் சேர்ந்த அவர் மோட்டார் சைக்கிள் மெக்கானிக்ஆவார் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மாலை 5 30 மணி அளவில் நடைபெற்றது

திருநெல்வேலியில் இறந்தவரின் பெயர் சகாதேவன் செல்வகுமார் (வயது 22) மடமாவடிகோவில் வீதியைச் சேர்ந்த அவரும் ஒரு மோட்டார் சைகிள் கராஜில் மெக்கானிக்காக வேலை செய்தவர் என்று அறியவந்தது.

ஆனைக்கோட்டை, கூழாவடி தபாற் கந்தோரடியில் இறந்தவரும் ஓர் இளைஞர் அவரின் பெயர் விவரங்கள் கிடைக்கவில்லை. அவர் வெளிநாட்டில் பணி புரிந்து விட்டு சில காலத்திற்கு முன்னர் தான் நாடு திரும்பியிருந்தார். (ஒ-க-10)

## "டிஸ்கவரி" நேற்றிரவு வெற்றிகரமாக ஏவப்பட்டது

கேப்கனவரால், செப் 30

இலங்கை நேரப்படி நேற்று இரவு 9 மணிக்கு அமெரிக்காவின் 'டிஸ்கவரி' விண்வெளி ஓடம் வான வெளிக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டது.

ஐந்து வீரர்கள் இவ் விண்வெளி ஓடத்தில் பயணம் செய்கின்றனர்.

எதுவித சிக்கலும் இன்றி விண்வெளி ஓடம் ஏவப்பட்டதாக பி பி.சி வானெலி அறிவித்தது.

கேப்கனவரால் வான வெளி நிலையப் பிரதேசத்தில் வானிலை சீராக இல்லாததாலும், 'டிஸ்கவரி' விண்வெளி ஓடத்தில் ஏற்பட்ட மின்சாரக் கோளாறு காரணமாக, இது ஏவப்படுவது ஒரு மணித்தியாலம் நேரறுக் தாமதமானது.

2 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் 'டிஸ்கவரி' விண்வெளி ஓடத்தை அமெரிக்க நாஸா விஞ்ஞானிகள் தயாரித்தனர். (ஒ-எ)

## நிவாரண விண்ணப்பப் படிவம்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நந்தர்மடம் கிராம சேவை அலுவலர் பகுதியில் இடம் பெயர்ந்தோராகப் பதிவு செய்தவர்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி விண்ணப்ப படிவங்கள் வழங்கப்படவுள்ளன

சனிக்கிழமை காலை 8 30 மணி தொடக்கம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இந்த விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும்

## அமைச்சர் இராசு ஜானகி சந்திப்பு

சென்னை, செப் 30

இலங்கை அமைச்சர் செல்லையா இராசதுரை சென்ற 20 ஆம் திகதி ராமாவரம் தோட்டம் சென்று அ. தி. மு. க. 'ஜா' அணித் தலைவி திருமதி ஜானகி அம்மாளைச் சந்தித்துப் பேசினர்

திருமதி இராசதுரையும் சந்திப்பில் கலந்து கொண்டார்.

முன்னுள் அமைச்சர் வீரப்பனையும் இவர்கள் சந்தித்தனர் (ஒ எ-4)

ஹொரவப்பொத்தானை இடைத்தேர்தல்:

# 86 வீத வாக்காளர்கள் தேர்தலில் பங்குபற்றவில்லை!

## எனினும் ஐ.தே.கவுக்கு வெற்றி!!

கொழும்பு, செப். 30

நேற்று ஹொரவப்பொத்தானைத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் 86 சத வீத வாக்காளர்கள் தேர்தலில் பங்குகொள்ளவில்லை 14 சத வீதத்தினர் மட்டுமே வாக்களித்தனர்.

அந்த வாக்காளர்களில் 5 260 பேர் ஐ தே. க. வேட்பாளரை ஆதரித்ததால் அவர் புதிய எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஹொரவப்பொத்தானை தேர்தல் தொகுதியில் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 42,773 ஆகும். தேர்தலில் வாக்களித்தவர்கள் 6,913 பேர் மட்டுமே. இது மொத்த வாக்காளரில் 13·8 சதவீதமாகும்.

ஐ தே. க. வேட்பாளர் திரு எம், திலகரத்தின 4,915 அதிகப்படியான வாக்குகளால் புதிய எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு திலகரத்னவை எதிர்த்து சுயேச்சை வேட்பாளர்களான திரு பி. எம். ஜி. டிக்கிரி பண்டா திரு ஏ எம் முதுபண்டா ஆகிய இருவரும் போட்டியிட்டனர்.

அவர்களுக்குக் கிடைத்த வாக்கு விவரம் வருமாறு:

திரு. டிக்கிரி பண்டா: 345

திரு முத்து பண்டா: 226

பழுதடைந்த வாக்குகள்: 82.

இதேவேளை வாக்களிப்பு காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணியுடன் முடிவுற்றது. (ஒ)

### சுபநேரம்

30. 09. 1988
புரட்டாதி - 14
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
06 02 முதல் 07 32வரை
ராகுகாலம்:
10 32 முதல் 12 02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
திருநாளைப்போவார் குருபூஜை

தென்னிலங்கையில்

## பொலீஸார் இருவர் உட்பட 11 பேர் சூட்டுக்குப் பலி!

கொழும்பு, செப். 30

கடந்த 48 மணித்தியாலங்களில் தென் இலங்கையில 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்களில் இருவர் பொலீஸார். ஒருவர் காலி மாநகரசபை உறுப்பினர். ஒருவன் 8 வயதுச் சிறுவன்.

பொலீஸார் இரண்டு பேரும் கரந்தெனியாவில் சுட்டுக் கொலலப்பட்டனர்.

தங்காலை, சூரியவேவா என்னுமிடத்தல் நடந்த சம்பவத்தில் 8 வயதுச் சிறுவன் மாண்டான். இரண்டு ஊர்காவல் படையினர் படுகாயமடைந்தனர்.

ஹோமாகமவில் காரில் சென்றுகொண்டிருந்த மேற்கு மாகாணசபை உறுப்பினர் சேனரத்ன மீது மோட்டார் சைககிளில் வந்த சிலர் சுட்டனர்.

மாகாணசபை உறுப்பினர் தப்பி விட்டார். அவரின் பாதுகாப்பு அதிகாரி உயிரிழந்தார்.

காலியில் நடந்த சூட்டுச்சம்பவத்தில் உயிரிழந்த மாநகரசபைஉறுப்பினர் இலங்கைபோக்குவரத்துச் சபையின் டிப்போ அத்தியட்சகராகவும் பணிபுரிந்து வந்தார். (ஒ எ)

### அந்த 30 பக்கங்கள்

இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சராக இருந்த அபுல்கலாம் ஆஸாத்தின் சுயசரிதையில 30 ஆண்டுகளாக வெளியிடப்படாமல் சீல் வைக்கப்பட்டிருந்த 30 பக்கங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

சீலை உடைக்கும் உத்தரவை புதுடில்லி உயர் நீதிமன்ற நீதியரசர் கிர்பால் நேற்று விடுத்தார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Lister Generator 9 K.W விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். Roshan Electrical Centre, No 440, Hospital Road, Jaffna. (6796)

உழவு இயந்திரத்தில் பூட்டிப் பாவிக்கக்கூடிய 6 இஞ்சி நீர் இறைக்கும் பம்பு, பெற்றோல்மாக்ஸ், லொறிக்குப் பாவிக்கும் சயிற் (Side) கண்ணாடி, 100 முழுச் சாக்குகள், தட்டச்சு இயந்திரம் (Olympia Traveller- Portable) முதலியன விற்பனைக்கு உண்டு. க. பொன்னம்பலம் "கற்பகதரு" கொல்லன் கலட்டி, தெல்லிப்பழை. (6770)

மிக மலிவான விலையில் நிலையுடன் கடைக்கதவு வீட்டுக்குத் தேவையான கதவுநிலை, யன்னல்கள், காட்டுத்தடி, கம்பிக் கட்டை, முட்டுத்தடி யாவும் விற்கப்படும். விபரங்களுக்கு:சகலக்ஷ்மி ஸ்றோஸ், மாட்டீன் றோட், யாழ்ப்பாணம். (6792)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கண்ணாடி அலுமாரி, Showcase, அலுமாரி, கட்டில், மேசை, Oven, சாப்பாட்டு மேசை, கண்ணாடி மேசை மற்றும் பல வீட்டுப் பொருள்களும் உடன் விற்பனைக்குண்டு. 167, Hospital Rd, (சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக) யாழ்ப்பாணம். (6836)

சிங்கப்பூரில் இருந்து கொண்டுவரப்பட்ட கிளாஸ் வகைகள், சில்வர் பொருள்கள் Bamix கேக்மிக்சர், சுவர்மணிக் கூடு மற்றும் பல பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு. 167, ஆஸ்பத்திரி வீதி. (சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக) யாழ்ப்பாணம். (6854)

### கார் விற்பனை

Fiat Car 132(S)உடன் விற்பனைக்கு உண்டு. சனிக்கிழமைக்கு முன்பு நேரில் தொடர்பு கொள்ளவும். No. 22/2 Vidance Lane, Chunduk kuli. (C/316)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவு உண்டு), சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

### வலம்புரிச்சங்கு

இலலங்களில் இலட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூஜை ஆராதனைகளுக்கும் உகந்த சிறந்த வலம்புரிச் சங்குகள் விற்பனைக்கு உண்டு. ஆகச் சிறியதன் விலை ரூ. 100/- தொடர்பு கொள்ளவும்; தாஸ் 188, புதுச்செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13. (6790)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. இல. 54, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (6838)

### கோழிக்குஞ்சு விநியோகம்

மூன்றுமாத Golden Comet பேட்டுக் கோழி 1ஆம் திகதி சனிக்கிழமை விநியோகிக்கப்படும். விலை 65/- முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (6785)

## தேவை

பில் கிளாக், ஸ்ரோர் கீப்பர் உடன் தேவை. ஆங்கில அறிவும் தட்டச்சு அனுபவமும், மேலதிக தகைமை. நேரில் வரவும் Ganga Enterprises 358, K.K.S Road, Jaffna (C/ 317)

யாழ். நகரில் அமைந்திருக்கும் அஜந்தாஸ் ரெச்ஸ்ரைல்ற்கு அனுபவம் வாய்ந்த ஆண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். அஜந்தாஸ், 54, பெரியகடை, யாழ்ப்பாணம். (6798)

அலுவலக பாவனைக்கான அறை அல்லது வீடு தேவை. கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வீடுகள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும். இல: 379, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (6797)

## மணமகன் தேவை

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு 40க்கும் - 45வயதுக்கும் இடைப்பட்ட மணமகன் தேவை. விவாகரத்து/ தாரம் இழந்தவர்களும் விண்ணபிக்கலாம். சீதனம் ரவுனில் வீடுவளவும், பணமும் கொடுக்கப்படும். தொடர்பு: 198, C/o Uthayan. (6865)

## மணமகள் தேவை

கனடாவில் வதியும் தங்கள் மகனுக்குப் பெற்றோர் (யாழ். இந்து வேளாளர்) மணப்பெண்ணைத் தேடுகின்றனர். மணமகனுக்கு வயது 30, 8இல் செவ்வாய் தோஷம் உண்டு. கனடாவில் வசிப்பவர்கள் அல்லது செல்லக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். இல. 380, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (7051)

### Advanced English

புதியபிரிவு ஆரம்பம் 8-10-88 சனி, ஞாயிறு நாட்களில் காலை 8 30 மணி - 10. 30மணி S.B. Iyer, 12, வைமன் வீதி, நல்லூர். (6863)

### Spoken English

புதியபிரிவு தூர இடங்களிலிருந்து வருபவர் வசதியை முன்னிட்டு நேரம் பகல் 2மணி- 4மணி, நாட்கள் திங்கள், புதன் ஆரம்பம்: 3-10-88. S. B. Iyar வைமன் வீதி, நல்லூர். (6864)

### 6ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சை

யாழ். இந்துக் கல்லூரி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி உட்பட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ், பாட கைநூல் வெளிவந்துவிட்டது. ஆக்கியோன் ஆ. ந. இராசேந்திரன், Dip in Accy. யாழ்ப்பாணத்தில் சகல முன்னணி புத்தகசாலைகளிலும் கிடைக்கும். விலை ரூபா 40.00. (6711)

### ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை

ஆண்டு 6ற்கான அனுமதி மாதிரிப் பரீட்சை 2-10-88 ஞாயிற்றுக் கிழமை பி. ப. 3. 00 மணிக்கு (தமிழ், கணிதம்) நடைபெறவுள்ளது. முன்னரே பதிவு செய்து கொள்ளவும். மாதிரி வகுப்புகள் பி. ப 4 30மணிக்கு தினமும் நடைபெறுகின்றன. ஆண்டு 3 முதல் 11வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்வி நிலையம், (கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (6799)

### A/L இரசாயனம்

108, Brown Road A/L 89, இரசாயனம் ஆசிரியர் சதீஸ், ஒரு வருட சனி, ஞாயிறு வகுப்பு (பிரிவு II) ஆரம்பம் (1-10-1988) சனி 4-00P-m சனி, ஞாயிறு (4 P m - 6 P.m) 4 - 5 பௌதிக இரசாயனம் 5 - 6. 15 Basic- Chemistry பிரிவு I திங்கள், செவ், புதன், வியா, வெள்ளி ஆரம்பமாகி விட்டது. (6787)

## 31 ஆம் நாள் நினைவு



தாயின் மடியில் 1 - 6 - 1952

மரணப் பிடியில் 31 - 8 - 1988

### திருமதி. து. விக்டோறியா (சந்திரா)

அழுது உடல் இளைத்துவிட்டோம்
ஆனால் மனத்துயர் நீங்கவில்லை
உன் நினைவலைகள் எம் நெஞ்சினில்
தினம் செந்நீராய் ஊற்றெடுக்கிறதே.

அன்பின் சிகரமாய். பாசத்தின் பிறப்பிடமாய் அன்பு மொழி பேசி அரவணைத்த அன்புத் தெய்வமே - எங்களையெல்லாம் சதிகலங்க வைத்துவிட்டு மீளாத்துயிலில் மிதக்கவிட்டு சடுதியான மரணத்தால் இறைவனடி சேர்ந்தாயோ? உன் ஆத்மா என்றென்றும் சாந்திபெற தினம் நாம் கர்த்தரைப் பிரார்த்திப்போம்.

உன் நினைவால் தினம் உருகும்
தாய்.
சகோதர சகோதரிகள்.
பிள்ளைகள்.

இல. 204
5. ஆம் குறுக்கு, வீதி
மணிப்புரி
கொழும்புத்துறை.

தகவல்- திருமதி மரியம்மா தம்பிராசா (6591)

உ
சிவமயம்

## 25 ஆம் வருடம் 1 ஆம் வருடம்





திரு வி. மார்க்கண்டு
தோற்றம்: 03- 04- 1920 மறைவு: 21- 03- 1963

திருமதி பத்மாவதி மார்க்கண்டு
தோற்றம்: 17- 06- 1927 மறைவு: 12- 10- 1987

திதி வெண்பா
மார்க்கண்டு பத்மா வதியம்மை சுன்னாக
ஊர்சென்று வாழ்ந்திட்ட உத்தமியார் சீர்ப்புரட்டா
திக்கண் வளர்பிறை தின்துதி யைத்திதியில்
சொக்கரடி சேர்ந்தார் துதி.

இங்ஙனம்,
திருமதி. இ. சுந்தராம்மாள்
மா. இராமலிங்கம் துஷ்யந்தி
பேரப்பிள்ளைகள்

கப்பல் உளவு,
சுன்னாகம்.

## உஷா சினிமா

எமது நேற்றைய புதிய வெளியீடு
கமலஹாசனின்
- சூரசம்ஹாரம் -
(ஒறிஜினல் பிரதி)
றெக்கோடிங் ஓடர்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்:
162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(6868)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

### COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 40 நாட்கள்
ஆரம்பம்: 07-10 1988 (திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)
கட்டணம்: 950/ -(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.)

### COMPUTER PROGRAMMING IN D BASE III

பயிற்சிக் காலம்: 2 மாதம்.
ஆரம்பம்: 11-10-1988 (செவ்வாய், வியாழன் வகுப்புகள்)
கட்டணம்: 1250/- (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்,

குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM Compatible, Computer இல் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்.

**UNIKCO Computer Centre**
No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோருக்கருகாமை)
(C 322)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சுப்பிரமணியம் பத்மநாதன்
ஆண்டவன் படைப்பு: 19 05- 1950
அநியாய அழிப்பு: 11- 10- 1987
திதி: 30- 9- 1988

பாசமலராய் மலர்ந்து அறிவால் எங்கும் மணம் வீசி அன்பால், பண்பால் உரிய நற்குணத்தால் உலகில் எல்லோர் உள்ளத்திலும் உறைந்து திடீரென உதிர்ந்த மலராகிவிட்ட எமது அன்புத் தெய்வமே! கூவ இருந்த குயில் கூவாமல் போனது போல் கோடி அழகு மலர் இடை நடுவில் வாடுதல்போல் ஆவல் நிறைந்த அன்பு மகளை விட்டுப் பிரிந்தீர்கள்.

தாங்கள் கட்டிய கோட்டை
இடிந்து வீழ்ந்ததுவே;
தவிக்கின்ற பிள்ளையின் கண்ணீர்
ஆறாகப் பெருகிறதே;
தத்தளிக்கும் மனையாளின் எண்ணத்தைக்
கரைய வைத்தீர்களே;
நண்பரின் பாசத்தை
அழிய வைத்தீர்களே;

பண்பின் பிறப்பிடமே, பாசத்தின் உறைவிடமே, அன்பின் அணிகலனே! உங்கள் நினைவு என்றும் பாசமுள்ள தாயினும் நேசமுள்ள குடும்பத்தின் நெஞ்சத்தை விட்டகலாது இன்றுடன் ஓராண்டு பூர்த்தியானாலும் ஒரு யுகம் முடிந்தாலும் மாறாது எம் கவலை.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்
அன்பு மனைவி: பரமேஸ்வரி
அன்பு மகள்: பவானி

காளிகோவிலடி
மூளாய்,
(6640)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்

## கேள்வி அறிவித்தல்-1988

### இணுவில் சந்தைக்கடைகள், சுன்னாகம் மேல்மாடிக் கட்டடம்

14 - 9 - 88ஆம் திகதி உதயன் / பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தல் கீழ்க் குறிப்பிட்டுள்ள பிரகாரம் காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

01. கேள்விப்பத்திரம் முடிவு திகதி - 26-10-1988 நண்பகல் 12-00 மணி
02. கேள்விகள் முடிவு திகதி - 28-10-1988 நண்பகல் 12-00 மணி.

கேள்விகள் யாவும் 28 - 10 - 1988 பிற்பகல் 12-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,

வலிகாமம் தெற்கு பிரதேசசபை.
சுன்னாகம், 28 - 09 - 88. (C / 332)

பாடுறும் மக்களின் பாவம் போக்க
பாரம் நிறைந்தவரின் பாரம் சுமக்க!...

## "அன்பரின் அழைப்பு"

-சுவிசேஷ நிகழ்ச்சி-

அறநெறிப் பேச்சாளர்
"சாமுவேல் கணேஷ்"
வழங்கும் அரிய நற்செய்தி

இடம்: வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி மண்டபம்
காலம்: செப் 30 ஆம் திகதி (வெள்ளி) மாலை 4 00 மணிக்கு (இன்று)
ஒக் 1ஆம் திகதி (சனி) மாலை 3-00 மணிக்கு (நாளை)

கிறிஸ்துவுக்காக இளைஞரின் படைப்பு
அனுமதி இலவசம்
(6859)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



### இ. கிருபாகரன் (கிருபா) நயினாதீவு

(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்)
ஆண்டவன் படைப்பு 14.08.1965 அநியாய அழிப்பு 12.10.1987
திதி:— 30.09.1988

விஞ்ஞானக் கல்வியிலே விந்தைதனைக்கான
அஞ்ஞானம் உன்னை அசைக்காத வேளை
அக்டோபர் பன்னிரண்டு திங்கள் காலை
கொக்குவில் பிரம்படியில் கொலையுண்டு
ஆண்டு ஒன்றாகியும் கிருபா உன் நாமம்
அழியாது ஈழம் என்றோர் அமைப்புக்காண
எந் நாளும் வாழ்கின்றாய் இதய வீட்டில்
இறைவா உன் விதிர்ப்பு இது மாற்றுவாயோ
எந் நாளும் உன் ஆத்மா சாந்தி வேண்டும்

குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள்.

நயினை 5 (6645)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை

எனது கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம் பிரயாணப் பைக்குள் (Travelling Bag) வைத்தபடி கொழும்பிலிருந்து மினி பஸ் வண்டியில் யாழ்ப்பாணம் வந்த சமயம் காணாமற் போய்விட்டது. கண்டெடுப்பவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைப்பின் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இப்படிக்கு
பரமேஸ்வரன் சிங்கராசா
வவுணத்தமிசை வீதி
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

(6635)



# N. C. E. ENGLISH CLASSES

**For March - 1989**

Commencing on **3 - 10 - 88**

CONTACT :
**North Ceylon Technical Institute**
14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna.

(C/287)



இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

## கேள்விப் பத்திர அறிவித்தல்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் பின்வரும் வாகனங்களை வாடகைச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக விண்ணப்பப் பத்திரங்கள் வாகனச் சொந்தக்காரர் / ஒப்பந்தக்காரர் ஆகியோரிடம் இருந்து கோரப்படுகின்றன.

1. தொழிற்சாலைப் பாவிப்புக்காக மோட்டார் வண்டி (Motor Car) மூன்று
2. தொழிற்சாலைப் பாவிப்புக்காக 06 தொடக்கம் 09 பயணிகள் பிரயாணம் செய்யக்கூடியவான (Van) இரண்டு
3. தொழிற்சாலைப் பாவிப்புக்காக உழவு இயந்திரம் (Tractor) இரண்டு

மேற்குறிப்பிட்ட கேள்விப்பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரையும் மீளப் பெற முடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்விப் பத்திரங்கள் 1988.10.10 ஆம் திகதி மாலை 4.00 மணி வரை விநியோகிக்கப்படும்.**

**--தொழிற்சாலை முகாமையாளர்.**

(C/304)



# VACANCIES
IN
## SAUDI ARABIA

(1) **Electrician**
06 Years Experience 650 SR

(2) **Work Supervisor**
06 Years Experience 900 SR

(3) **Carpenter**
08 Years Experience 650 SR

(4) **Generator Electrician**
06 Years Experience 750 SR

உணவு, தங்குமிடம் இலவசம்

(1) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் Hospital Cleaners } 400 SR
(2) ஏயர்போட் கிளீனர்ஸ் Airport Cleaners } 400+100 SR
(3) கப்பல் துறைமுக வேலையாட்கள் Habour Workers 380 SR

Food, Medical, Accomodation Free

**T.V. TRAVELS&TOURIST**
Brown Road,
Railway Station (Front),
Kokuvil.

C/ 300)


கிளிநொச்சி

# கனகபுரம் மகாவித்தியாலய

## அகதிகளை இடம் மாற்றக் கோரிக்கை

கிளிநொச்சி, செப் 30

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ள அகதிகளை வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்காதபட்சத்தில் பாடசாலையைமூடவேண்டிய நிலை உருவாகும்.

பிரஸ்தாப பாடசாலை அதிபரும்பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களும் கிளிநொச்சி அரசாங்கஅதிபருக்கும், கிளிநொச்சி கல்விப் பணிப் பணிப்பாளருக்கும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தமது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது:- இப்பாடசாலையில் விசுவமடு, இந்தியா ஆகிய இடங்களில் இருந்துவந்த சுமார் 100 குடும்பங்கள் அகதிகளாக உள்ளன.

இவர்கள் பாடசாலையிலுள்ள நான்கு மண்டபங்கள். பாடசாலை விடுதி ஆகியவற்றில் தங்கியுள்ளனர். பாடசாலைத் தளபாடங்கள் சில சேதமடைந்துள்ளன. பாடசாலைக் கட்டடமும் அசுத்தமாகி உள்ளது. சூழலும் மாசுபடுத்தப்பட்டுள்ளது.

இதனால்பாடசாலையை நடத்த முடியாத நிலையும், தொற்றுநோய் பரவும் அபாயமும் உருவாகியுள்ளன.

கல்வித் திணைக்களம் பாடசாலை விடுதித் திருத்த வேலைகளுக்கு சுமார் 52 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்தபோதும் அகதிகள் கட்டடத்தில் இருப்பதால் அவ்வேலைகளை உடனடியாகச் செய்யமுடியாதிருக்கிறது.

இப்படி முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ 76)

## இன்றைய நிலைக்குக் காரணம் அரசியல் தலைவர்களின் தவறே

அச்சுவேலி, செப். 30

''தமிழ் அரசியல் தலைவர்கள் அன்று தொடக்கம் செய்துவந்த அரசியல் தவறுகள் தான் இன்று இலங்கையில் தமிழ் இனம் அடிமைப்பட்டு அல்லல் உறுவதற்கு காரணம் ஆகும். இதே நிலை தொடர்ந்து ஏற்படக்கூடாது. நாம் இன்னல்களை அனுபவித்தாலும் எமது சந்ததி சுதந்திரத்துடனும் தன்மானத்துடனும் தலை நிமிர்ந்து வாழவேண்டும்,

சிறுப்பிட்டி சி. வை. தாமோதரம்பிள்ளை சனசமூக நிலைய வளவில் நடைபெற்ற அன்னையர் உண்ணாவிரதத்தை முடித்துவைத்துப் பேசுகையில் சிறுப்பிட்டி பிரசைகள் குழு செயலாளர் திரு கே. தங்கராசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எஸ். சிவலிங்கம் வட இலங்கை மினி சினிமா சங்கத் தலைவர் திரு. எஸ். வசிசரநாதன் உட்பட பலர் உரையாற்றினர். (ச-11)

## முத்துத்தம்பி வித்தியாலய இல்லப் போட்டி

யாழ்ப்பாணம், செப்30

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமதி புஷ்பவதி சபாநாயகம் பரிசுகளை வழங்குவார்.

அதிபர் திருமதி க. சிதம்பரநாதன தலைமையில் வைபவங்கள் நடைபெறும். (இ)

## நிர்வாக சபைக் கூட்டம் ஒத்திவைப்பு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் நிர்வாக சபைக் கூட்டம் பின் போடப்பட்டுள்ளது.

அக்டோபர் முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த பிரஸ்தாபக் கூட்டம் 8 ஆம் திகதியே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க-9)

## வேட்பாளர் பட்டியல் தயாரிப்பதில் ஈ. பி.ஆர். எல். எப். தீவிரமாக ஈடுபட்டுள்ளது

யாழ்ப்பாணம். செப்.30

வடக்கு — கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்பட்டியலைத் தயாரிப்பதில் ஈ பி. ஆர். எல் எவ் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக மத்திய குழுப் பிரமுகரொருவர் தெரிவித்தார்.

மேற்படி பிரமுகர் மேலும் தகவல் தெரிவிக்கையில்:-

ரெலோவுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து தற்போது இருதாப்பினரும் ஆராய்ந்து வருகின்றனர்.

எமது வேட்பாளர்பட்டியலில் இயக்கத்தோழர்கள் மட்டுமன்றிப் பல சமூகப் பிரமுகர்களும் இடம்பெறஉள்ளனர். பெயர் விவரங்கள் தற்போது வெளியிடப்படமாட்டாது. வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்பு தான்பெயர் விவரங்கள் வெளியாகும்

கிழக்கு மாகாணத்தில் போட்டியிட சில சிங்களப் பிரமுகர்களும்விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய சோஷலிச முன்னணி போட்டியிடாவிட்டால் பட்டியலில் சிங்களவர்கள் இடம்பெறுவது குறித்து ஆராய்ந்து முடிவெடுப்போம்.

மட்டக்களப்பு, திருமலை, மன்னார், அம்பாறை மாவட்டப் பட்டியல்களில் முஸ்லிம்களும் இடம்பெறஉள்ளனர்.

இப்படி அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்தார். (இ-21)


## ★ கோம்பியூட்டர் பயிற்சி ★

Diploma in Computer Programming
in Basic & Data processing Course
New Batches Start on:

1- 10- 88 (8. 30 a.m) Weekend Batch
7- 10- 88 (9. 00 a.m) Week Day Batch

# IDP
Institute of Data Processing

யாழ்ப்பாணம்
(K. K. S Road
சிவன் கோவிலடி)

தெல்லிப்பழை
(4. 00 P.m)
(துர்க்கையம்மன் கோவிலடி)

(6644)



**CITY & GUILDS - TELECOMMUNICATION TECHNICIAN**
(LONDON)
**MAY JUNE**
**1989 Examinations**

Commencing on **1st Oct. 1988**

உங்கள் பதிவுக்கு :
**North Ceylon Technical Institute**
14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna.

(C/290)



## இலங்கைச் சுங்க அலுவலகம்
### மன்னார் மாவட்டம்
# பல்வகைப் பொருட்களின் விற்பனை

விற்பனைக்காக கீழ்வரும் பொருட்பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வகைப் பொருட்களுக்கான கூறு (ஒன்றின்) இன் அல்லது கிலோ ஒன்றின் விலைக்கேள்விகள் அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் இருப்பின், என்னால் 25 - 10 - 1988 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிவரை மன்னார் மாவட்ட அரச அதிபர் செயலகத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட சுங்க சேகரிப்பாளர் பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இங்ஙனம் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விகள் 25 - 10 - 1988 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு வருகை தந்துள்ள கேள்வினர் முன்னிலையில் கேள்விகள் உள்ளடக்கிய அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகள் பிரித்துப் பரிசீலிக்கப்படும். வருகை தர முடியாத கேள்வினர் எழுத்து மூலம் தமது பிரதிநிதிகளை நியமிப்பின் அப்பிரதிநிதிகள் எனது அனுமதியுடன் அலுவலகத்தில் சமூகமளிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும் அதி உயர்ந்த விலை கொண்ட கேள்வி ஏற்றுக் கொள்ளுமிடத்து கேள்விக்குரியவர் முழுப் பொருட்களுக்கான மொத்த விலைத்தொகையை ''வங்கி வரைவோலை'' (Bank Draft) கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளுட்பட மூன்று நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

இதனைத் தொடர்ந்து விற்பனையான பொருட்கள் யாவும் என்னால் தீர்மானிக்கப்படும் இடத்திலிருந்து விநியோகிக்கப்படும். மேற் கூறிய நிபந்தனைகள் தவிர்ந்த ஏனைய நிபந்தனைகளுக்கு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானி இல. 291 (1984 - 03 - 30) இல் பிரதான சுங்க சேகரிப்பாளரினால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்குக் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

### பொருள் விபரம்

1. சாரங்கள் (Sarongs), குரு (Guru) கிப்ஸ் (Kibs)
2. படுக்கை விரிப்புகள் (Bed sheets)
3. துவாய் (Towels)
4. துணி வகைகள் (Fabrics including Blouse material)
5. வொயில் சேலைகள் (Voile Sarees)
6. பட்டுச் சேலைகள் (Silk Sarees)
7. வேட்டிகள் (Vershties)
8. காற்சட்டைத் துணிகள் (Suitings)
9. தேயிலை வடிகள் (Teastrainers)
10. கணித வரைதல் கருவிப் பெட்டிகள் (Box of Instruments)
11. குங்குமம் (Kum kum pottu)
12. பீடிகள் (Beedies in bundles)
13. பித்தளை (Copper & Brass)
14. கராம்பு (Cloves)
15. கொழுவி இழுவைகள் (Zipfastners)
16. விடியோ கசற் (Video cassetes)
17. சவர்க்கார வகைகள் (Toilet soaps assortod)
18. குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் (Toys)

குறிப்பு:-
இவை பற்றிய மேலதிக விபரங்களை மன்னார் மாவட்ட மேலதிக சுங்க சேகரிப்பாளர் அவர்களின் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. சி. செபநாயகம்
மன்னார் மாவட்ட மேலதிகச் சுங்கச் சேகரிப்பாளர்,
மன்னார்.

இல: GA/CUS/SALE,
சுங்கப் பணிமனை,
அரச அதிபர் செயலகம்,
மன்னார்
1988-09-27

(C-311)





# உயரிய உழைப்பு உச்ச இலாபம்

புறஉடற் கூட்டை மரத்தால் அமைத்துத்தரும் வசதியும் உண்டு.

## லால் கொமெற் சுப்பர் லாரி

அடித்தளம் ரூபா: 470,000/- முதற்கொண்டு.

★ சுமை ஏற்க 224'' இடவசதி.
★ 9½ தொன் பாரம் ஏற்கும் சக்தி
★ எரிபொருள் செலவீட்டில் அதிகண்டிப்புக் காட்டுவோரையும் திருப்திப் படுத்தும் அளவு சிக்கனம்.
★ லேலண்ட் அம்சமான உறுதிசெய்யப்பட்ட நீண்டகால உழைப்பு.
★ பராமரிப்பு அறிவுரை திருத்தவேலைகளுக்குத் தொழிற்சாலைப் பயிற்சி பெற்ற பொறியியலாளர் மற்றும் சிப்பந்திகளின் சேவை உதவி.
★ தேர்ந்தெடுக்கக் கொன்ஸ்ரன்ற்மெஷ் அல்லது மலைநாட்டுப் பகுதிக்கு உகந்த சிங்க்ரோமெஷ் என இரு வகை கியர் முறைகள் உண்டு

லால் கொமெற்-நாளும் பணம் பெருக்க நம்பகமான பங்காளன்

நிதியக் கடன்/குத்தகைக் கடன் வசதிகள் பற்றி எம்மிடம் விசாரிக்கவும்

**லங்கா அசோக் லேலண்ட் லிமிட்.**
38 - 40, எட்வட்ஸ் லேன், (பப்ளிகேஷன் வீதி, கொழும்பு 3.
(பொரத்தாலோக்க மாவத்தச் சந்தியருகில்)
தொலைபேசி 502286.
லால் ஸ்பெயர் பார்ட்ஸ் சென்ரர்.
241, பஞ்சிகாவத்த ரோட், கொழும்பு 10.

GPL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
28 - 3 - 1930

மறைவு:
11 - 10 - 1987

### அமரர் ஆ. தாமோதரம்பிள்ளை

(ஆசிரியர் - புங்குடுதீவு)

தாமோதரா! தண்தமிழாளனே!
ஈசனின் பாதம் இன்தமிழால் உவந்தவனே!
சிவன் கழல் நினைந்துருகி நீ பாடும்
பண்ணின்றும் எம் காதில் பரமசுகம் பேச
விண்ணில் குடி புகுந்தாய்
வீடு•ந்தாயோ உள் நின்றுருக்கும்
உணர் வெள்ளப்பெருக்கே உனக்கான
அஞ்சலிகள்; அன்புமலர் தூவினோமே!

அன்பு மனைவி, மக்கள்.

(6819)

வவுனியா பரமேஸ்வரன் கங்கா ஆட்கொணர்வு மனு:

## அழைப்பாணை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற குறிப்புடன் மன்ஜித் சிங்கின் பதில்

கொழும்பு செப் 30

வவுனியா பரமேஸ்வரன் கங்கா ஆட்கொணர்வு மனு தொடர்பாக ஆஜராகும்படி வவுனியா இந்தியப்படை முகாம் பொறுப்பதிகாரி பிரிகேடியர் மன்ஜித் சிங்குக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட அழைப்பாணை "ஏற்றுக்கொள்ளப்படவில்லை" என்ற குறிப்புடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி ஆட்கொணர்வு மனு அண்மையில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது இத்தகவல் வெளியானது.

ஏற்கனவே இம் மாதம் 6 ஆம் திகதி பிரிகேடியர் மன்ஜித் சிங்குக்கு பரமேஸ்வரன் கங்காவை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கு அவர் பதில் தெரிவிக்கவில்லை.

பின்பு 14 ஆம் திகதி பதிவுத்தபால் அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த அழைப்பாணை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற தமிழ்க்குறிப்புடன் திரும்பி விட்டது.

இதனை அடுத்து 'இது நீதிமன்றத்தை அவமதித்த செயல்' என மனுதாரரின் சட்டத்தரணி திரு. குமார் பொன்னம்பலம் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அரசமைப்பு 105 (3, பிரிவின் கீழ், நீதிமன்றத்தை அவமதித்ததற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நீதிபதியை அவர் கேட்டுக் கொண்டார்.

(இ 21)

### பணி வெளியீடு

யாழ்ப்பாணம், செப்30

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் மிகவிரைவில் 'பணி' என்ற பெயரில் மாதந்தோறும் செய்தி இதழ் ஒன்றை வெளியிடுவதெனத் தீர்மானித்துள்ளது. (ச)

சோல் ஒலிம்பிக்:

## ஆடவருக்கான ஹொக்கி நாளை நடைபெறும்

சோல், செப் 30

சோல் ஒலிம்பிக்கில் ஆடவருக்கான ஹொக்கி இறுதிப் போட்டி நாளை சனிக்கிழமை நடைபெறும்.

பிரிட்டனும் மேற்கு ஜேர்மனியும் இறுதிப் போட்டியில் மோதும் தகுதியைப் பெற்றுள்ளன.

நேற்று நடந்த அரை இறுதிப் போட்டிகளில் பிரிட்டன் ஆவுஸ்திரேலியாவை 3-2 கோல்களாலும்– மேற்கு ஜேர்மனி நெதர்லாந்தை 2-1 கோல்களாலும் தோற்கடித்தன.

ஐந்தாவது இடத்தைப் பிடிக்க பாகிஸ்தானும் இந்தியாவும் மோதவுள்ளன.

நேற்று நடந்த ஒரு போட்டியில் இந்தியா, ஆர்ஜன்டீனாவை 10-9 கோல்களால் தோற்கடித்தது.

இன்னொரு போட்டியில் பாகிஸ்தான் சோவியத் யூனியனை 1-0 கோலால் தோற்கடித்தது. (ஓ-எ)

## ஓராண்டு நினைவஞ்சலி



கொல்லங்கலட்டி
திருமதி
காந்திமதியம்மா
ஆறுமுகம்

ஆண்டவன் படைப்பு:
27 - 3 - 1911
அநியாய அழிப்பு:
12 - 10 - 1987
திதி: 1-10-1988


மாறுத அன்பினால் மகிழ
வைத்த எம்தெய்வமே!
தீராத துயர் தன்னில்
துவள வைத்து
எங்கு சென்றாய்?
ஈராறு மாதமாய்
உனை நினைந்து வாடும்
நாம் – உன்
பாதாரவிந்தமதில்
எமது அஞ்சலியைச்
செலுத்துகின்றோம்.

பிரிவுத்துயரத்தால் வாடும்:

பிள்ளைகள்:–
ஆனந்தரதி
திருநாவுக்கரசு,
செல்வராணி
தரராசுவாமி,
மருமகன்:–
குமாரசுவாமி,
இளவாலை.
உற்றார், உறவினர்.

(6483)

## முதலாண்டு நினைவஞ்சலி

★  ★

### செல்வன் சத்தியதாசன் லானல்தாசன்

மலர்வு: 14- 12- 1967 உதிர்வு: 12- 10- 1987

திதி: 30- 09- 1988

ஆண்டு தான் ஒன்று கழிந்தாலென்ன
அகிலமே அழிந்திடினும்
தாண்டாது உன்நினைவு- தூயவனே
எம்மிதயம் உள்ளவரை.

"ஓராண்டு நிறைவின்போது உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
சாந்தி – சாந்தி."

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா அம்மா அக்கா (நிர்மலா)
அண்ணன்மார்: ஜோர்ஜ் கிறிஸ்ரிகுமார் (சுவிஸ்லாந்து)
ஜெபநேசன்–(ஜேர்மனி)
மற்றும் அண்ணி, பாசமுள்ளபெருமக்கள்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

31/15, தலையாளி-
சபாபதி வீதி, யாழ்ப்பாணம்.

(6801)

## —அன்புச் செல்வங்கள்—



சிவகுருநாதன்
**இராசநாதன்**
மண்ணில்:
8 - 10 - 1957
விண்ணில்:
9 - 4 - 1987



சிவகுருநாதன்
**நித்தியநாதன்**
ஆண்டவன் படைப்பில்:
3 - 9 - 1965
ஆள்பவன் அழிப்பில்:
21 - 4 - 1985



சிவகுருநாதன்
**கணேசநாதன்**
அன்னையின் மடியில்:
10 - 6 - 1967
அநியாய அழிவு:
12 - 10 - 1987

ஏங்குவதற்கென எங்களைத் தவிக்கவிட்டு
ஏன் தான் சென்றீர்கள் மூவீரும்?
ஏங்குகின்றோம் நாம் இங்கு சென்ற இடந்தெரியவில்லை
காத்திருந்த கண்களில் நீரருவி பாய்கின்றது
காற்றாகி விட்ட உங்கள் ஆத்மா ஊற்றாகி நின்று
எம் கண்ணீரைக் காய்ச்சட்டும்
மண்ணின் விடுதலைக்காய் நீரளித்த பங்களிப்பில்
எம் நெஞ்சம் அமைதி பெறட்டும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

—ளிக்கிழமை 01-10-88 அன்று எமது இல்லத்தில் இவர்களின் ஆத்ம சாந்திக்காக நடைபெறும் கிருத்தியங்களில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கந்தன் அருள்" இருபாலை.

(6633)

## 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**தேட்சணாமூர்த்தி தவராசலிங்கம் (தனம்)**
தோற்றம்: 10 - 05 - 1944



**தவராசலிங்கம் கனகமலர் (பேபி)**
தோற்றம்: 03 - 02 - 1946



**தவராசலிங்கம் தர்மிகா**
தோற்றம்: 12 - 07 - 1986



**நடராசா இன்பராசா**
(யா/பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதி ஆண்டு மாணவன்)
தோற்றம்: 12 - 05 - 1965

அழிப்பு: 12.10.1987

12 - 10 - 1987 இல் அகால மரணமடைந்த எங்கள் குலவிளக்காய் விளங்கிய திரு. தெ. தவராசலிங்கம், அன்பு மனைவி திருமதி கனகமலர், இவர்களின் அன்பு மகள் தர்மிகா, மருமகன் திரு. நடராசா இன்பராசா ஆகியோரது 1ஆம் ஆண்டு திதியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 30-9-88 இன்று வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் (பிரம்படி கொக்குவில்) நடைபெறும். அத்தருணம் மேற்படி கிரியைகளிலும் பிரார்த்தனையிலும் அதன் பின் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு இவர்களது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வன் த. கரன், செல்வன் த. கஜேந்திரன்
(அன்புப் பிள்ளைகள்)

தட்சணாமூர்த்தி குடும்பம், பிள்ளைகள்
சிலையர் ஒழுங்கை, கலட்டி.

திரு. நடராசா குடும்பத்தினர்
உபதேசியார் வளவு, கோப்பாய்.

திருமதி செல்லையாவும், பிள்ளைகளும்
டச்சு [illegible]

(C/318)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



குப்பிளான்
**பொன்னம்பலம் சச்சிதானந்தன்**
(அப்பு)

(Paper Technologyest- காகிதத் தொழில் நுட்பவியலாளர், காகிதக் கூட்டுத்தாபனம் வாழைச்சேனை)

தோற்றம்:- 04- 01- 1945
மறைவு: 12- 10- 1987

திதி: 30- 09- 1988

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், எம்மையெல்லாம் சரியான பாதையில் வழிநடத்திய கலங்கரை விளக்காய் எல்லாம் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
மனைவி, மக்கள்
சகோதரி, மைத்துனர், பிள்ளைகள்,
மாமன்மார், உறவினர்கள், நண்பர்கள்.

(6590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல - 292/2 நாவலர் வீதி. தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 32073
30-09-1988 உ. பெ. இல. 83

## ஜனாதிபதித் தேர்தலும் தமிழர் பிரச்சினையும்

எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கப்போகிறது

இந்தத் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக இதுவரை பெயர் அறிவிக்கப்பட்டவர்கள் இருவர். இப்போதைய பிரதமர் திரு. ஆர். பிரேமதாச ஒருவர்; முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அடுத்தவர்.

இந்த நாட்டின் மிக நீண்டகாலப் பிரச்சினை, ஏறக்குறைய முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட பிரதான பிரச்சினை— தமிழ் மக்களின் பிரச்சினை. அது இன்னமும் தீர்ந்தபாடில்லை.

ஆகையால் தமிழர் பிரச்சினை குறித்து ஜனாதிபதி வேட்பாளர்களின் நிலைப்பாடு என்ன என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டியது அவர்களின் கடமை.

இருவரும் இன்னமும் தேர்தல் விஞ்ஞாபனம் என்று எதையும் வெளியிடவில்லை. ஆனால் திருமதி பண்டாரநாயக்கா, தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு முன்னோடியாக, அனேகமாக தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒத்திருக்கும் விதத்தில் வாக்காளருக்கான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

அந்த அறிக்கை பிரசுரமாகவும் வெளியிடப்பட்டுள்ளது பிரஸ்தாப அறிக்கையில் தமிழர் பிரச்சினை குறித்து விசேடமாக— குறிப்பாக— எதுவும் சொல்லப்படவில்லை. தமிழர் பிரச்சினை விடயத்தில் எழுத்தளவில் மௌனமாக இருந்து கொண்டு, பிரசாரத்தின் போது இடத்துக்கும், நேரத்துக்கும் எற்றமாதிரி அதனைக் கையாளத் திருமதி பண்டாரநாயக்கா உத்தேசித்திருக்கிறாரோ தெரியவில்லை!

எப்படியோ தமிழர் பிரச்சினையைப் பெரிதாகப் பார்க்கும் ''சீரியஸ்னெஸ்'' அவரிடம் இருக்கவில்லை என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது ஆனால் 1977 இல் ஒன்றாக இருந்த இலங்கை, 1988 இல் இரண்டாகத் துண்டாடப்பட்டு விட்டதாக வரைபடம் கீறிக் காட்டப்பட்டுள்ளது நச்சுத் தன்மையை புலப்படுத்துவதாகும்.

இதே வேளை அரசு வேட்பாளரான திரு. பிரேமதாசா —

வடக்கு - கிழக்கு இணைப்பு நிரந்தரமாவதைத் தான் விரும்பவில்லை என்றும் —

அதனை இல்லாமற் செய்வதற்காக, சர்வசன வாக்கெடுப்பை உரிய காலம் பிந்தாமல் விரைவில் நடத்துவதாகவும் — கூறியிருக்கிறார்.

தமிழர்கள் தங்கள் தாயகத்தில் தமக்கென ஒரு ஆட்சி நடத்தி, தம்மைத் தாமே ஆளக்கூடாது என்பதுதான் சிங்களத் தலைவர்களின் விருப்பம் என்பதை இதிலிருந்து அறியமுடிகிறது.

சிறிமாவோ, அனுரா, லஷ்மன், அனில் முனசிங்கா முதற்கொண்டு ஜே. ஆர்., பிரேமதாச, காமினி, லலித் வரை இதனையே தங்கள் பேச்சுக்களில் பிரதிபலித்து வருகிறார்கள்

இந்த நேரத்தில். தந்தை செல்வநாயகம் 1975 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி. அப்போதைய தேசிய அரசபேரவையில் உதிர்த்த சில கருத்துக்களை நாம் ஞாபகப்படுத்திப் பார்ப்பது நல்லது.

'தமிழர்கள் இந்நாட்டில் ஆளப்படும் இனமாக வாழும் நிலையை ஒரு போதுமே ஏற்கமாட்டார்கள். அவர்கள் அடிமைத் தனத்துக்கு எதிராகப் புரட்சியில் இறங்குவார்கள். எங்கள் முன்னோர்களைப் போல, எமக்கென ஒரு தனித்தமிழ் நாட்டினை மீண்டும் உருவாக்கிக் கொள்வதே, எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒரே வழி என்று கருதுகிறோம்

''எங்கள் இனத்தின் சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் நாம் போராடுகிறோம். இது மிகவும் வில்லங்கமான காரியம்தான். என்றாலும் நாங்கள் சிங்கள இனத்தினால் விழுங்கப்பட்டு விடாமற் தடுப்பதற்கு இந்தப் பாதையிற் செல்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை.

''எங்கள் வழியில் நாங்கள் சந்திக்க வேண்டிய துன்பங்களைப் பற்றி நாம் உணராமல் இல்லை. ஆனால் எவ்வளவு தான் துன்பங்களைச் சந்திக்க நேரிடினும் சுயமரியாதை உள்ள மக்களாக வாழ்வதற்கு இதைவிட வேறு வழியே இல்லை ''

இது தந்தை செல்வநாயகம் பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் சொன்னவை. ஆனால் அதன் உள்ளார்த்தத்தை, உண்மையை சிங்களத் தலைவர்கள் பத்துச் சதவீதம் கூட உணர்ந்ததாகத் தெரியவில்லை.

அப்படி உணர்ந்திருந்தால் வடக்கு-கிழக்கு இணைப்பை நிரந்தரமாக விடமாட்டோம் என்று சொல்வார்களா?

ஆகவே தேசிய ரீதியில் நோக்கும் போது சிங்களவர்கள் தமிழர்களின் நிலையை விளங்கிக் கொண்டு, ஒரு புரிந்துணர்வை உருவாக்காதவரை, தமிழர்களும் மனிதர்கள், சக பிரஜைகள் என்று உணராதவரை, மனிதாபிமானத்துடன் பார்க்காதவரை, தமிழர் பிரச்சினை இந்நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் துரதிர்ஷ்டம் நிலைபெற்றுவிடும்.

# ஐ. நா. கண்காணிப்பில் தேர்தல் நடத்த எதிரணி நிபந்தனை!

ரங்கூன், செப். 29

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் நிபந்தனைகளுடன் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாக பர்மாவின் எதிர்க்கட்சிகள் அணி நேற்று அறிவித்தது.

மூன்று எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைத்துள்ள அணியின் சார்பில் விடுவிக்கப்பட்ட நிபந்தனைகள் வருமாறு;

★ மக்கள் பொதுக் கூட்டங்களை நடத்த அனுமதிக்கவேண்டும்.

★ பிரசாரங்களை மேற்கொள்ள அரசியல் கட்சிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

★ தேர்தலைக் கண்காணிக்க ஐ. நா. வின் மேற்பார்வையாளர் குழு ஒன்று பர்மா வர அனுமதிக்கப்பட வேண்டும். (எ)

# இந்தித் திணிப்புக்கு எதிராக ஜெயில்சிங்

சென்னை, செப். 29

''இந்தியை விரும்பாதவர்களிடம் அதைத் திணிக்கக் கூடாது'' என்று ஜெயில்சிங் கூறினார்.

பஞ்சாப் சங்கத்தின் சார்பில் சென்னையில் தொடங்கப்பட இருக்கும் ''டாக்டர் எம். ஜி. ஆர். -ஆதர்ஸ் பப்ளிக் ஸ்கூல்' பள்ளிக்கட்டடத் திறப்பு சென்னை வந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் அடிக்கல் நாட்டினார்.

இந்தவிழாவில் அவர் பேசுகையில் கூறியதாவது:-

இந்தியைப் படிக்க விரும்பாதவர்கள் மீது அதைத் திணிக்கக் கூடாது

எல்லாப் பிராந்திய மொழிகளுமே அருமையான மொழிகள். ஒரு மாநிலத்திலிருந்து வந்து இன்னொரு மாநிலத்தில் வாழ்கிறவர்கள் அந்த மாநிலமொழியை விரும்பிக் கற்றுக் கொள்ள வேண்டும் அப்போது தான் அங்குள்ளவர்கள் அந்த மாநில மக்களுடன் ஒன்றிவாழ முடியும்.

கொள்கை இல்லாத அரசியல் வெறும் குண்டர்கள் களமாகத்தான் இருக்கும்

அரசியல் சட்டப்படி ஒவ்வொரு குடிமகனுக்கும் சில உடைமைகளும் கடமைகளும் வழங்கப்பட்டுள்ளன,

இவ்வாறு ஜெயில்சிங் கூறினார். (எ-4)

80 லட்சம் ரூபா பற்றிய

# நால்வர் அணியின் வழக்கை சந்திக்கத் தயார்; ஜெ' அணி குழந்தைவேலு அறிவிப்பு

சென்னை, செப். 29

அ. தி. மு. க. 'நால்வர்' அணியின் வழக்கைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக ஜெயலலிதா அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பி. குழந்தைவேலு தெரிவித்தார்.

ஜெயலலிதா அணியின் துணைப் பொதுச் செயலாளரான திரு. குழந்தைவேலு செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது;

கட்சிநிதியாக ஒன்றரைக் கோடி ரூபாவை ஜெயலலிதா வசூலித்ததாகக் கூறியிருப்பதுஉண்மைக்குப்புறம்பானது.

80 லட்சம் ரூபா வசூலாகி இருப்பதாக ஜெயலலிதா எந்தச்சமயத்திலும் கூறவில்லை.

நால்வர் அணிகூட்டிய பொதுக் குழுக்கூட்டத்தில் வேஷம் போட்ட பச்சோந்தியாக பல் இளித்து வரும் பண்ருட்டியுடன் சேர்ந்து நெடுஞ்செழியன் ஜெயலலிதாவிடம் கணக்குக்கேட்டு இருக்கிறார்.

கணக்குக் கேட்க அவருக்கு என்ன அந்தஸ்த்து இருக்கிறது?

நால்வர் அணி மற்றவர்களுக்கு எடுபிடிகளாக மாறலாமே தவிர, மக்கள் மத்தியில் எடுபடப்போவதில்லை. அவர்கள் அரசியலில் அனாதைகளாகி விட்டனர்.

இப்படி திரு. குழந்தைவேலு சொன்னார். (எ)

### வெளி உலகில்

## பிரிட்டன் ஈரான் உறவு

வாஷிங்டன், செப் 29

ஈரானுடனான உறவுகளை அபிவிருத்தி செய்வதில் பிரிட்டன் நாட்டம் செலுத்தி வருகிறது.

இது தொடர்பாக ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வேலாயதியுடன் இது தொடர்பான பேச்சுக்களை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜிப்ரி ஹோவ் நேற்று (வியாழன்) நடத்தினார் (எ)

## கறுப்பினப் போராளி சுட்டுக் கொலை

கேப்டவுன், செப் 29

தென் ஆபிரிக்காவில், கேப்டவுனில் கறுப்பு இனப்போராளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்என்று அறிவிக்கப்பட்டது.

## கோரிக்கை நிராகரிப்பு

இஸ்லாமபாத் செப் 29

தேர்தல் நடைபெறும் வரை காபந்து பிரதமர் ஒருவரை நியமிக்கப் போவது இல்லை என்று பாகிஸ்தான் பதில் அதிபர் குலாம் இஷாக் கான் தெரிவித்தார்.

காபந்து பிரதமரை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரிப்பதாக பதில் அதிபர்செய்தியாளரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளி தியாகி திலீபனின் ஓராண்டு நினைவை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண துக்கம் அனுஷ்டிக்கபபட்டது.

கடந்த 15 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள். வங்கிகள், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

வீதிகள், பொதுஇடங்களில் வாழை, தென்னை மரங்கள் கட்டப்பட்டிருந்தன. கறுப்புக்கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

இறுதி நாளான 26 ஆம்திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையின் பிரகாரம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (இ-21)

## தனது மரணத்தின் மூலம் நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை உணர்த்தியவர் திலீபன்

பலாலி, செப். 30

தமிழ் மக்களின் உண்மையான நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை தனது மரணத்தின்மூலம் உணர்த்தி உள்ளார் தியாகி திலீபன்.

ஆவரங்கால் சர்வோதயச் சந்தியில் இடம்பெற்ற தியாகி திலீபனின் நினைவுத் தூபி திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்திய திரு. தேவதாசன் மேற் கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட தியாகி சாமி (தவம்) அவர்களின் தாயார் திருமதி ஆறுமுகம் தூபியை திறந்து வைத்தார்

தியாகி திலீபனின் நினைவாக நடைபெற்ற முழு நாள் உண்ணாவிரத முடிவில் இது திறந்து வைக்கப்பட்டது.

திலீபனின் நினைவாக பல இளைஞர்களினதும், பல யுவதிகளினதும் கவிதைகளும் வாசிக்கப்பட்டன.

பலர் இரங்கலுரையும் நிகழ்த்தினர். (இ- 119)

'கல்வியூட்டும் திட்டம்' அறிமுகம்

## 'எயிட்ஸ்' குறித்து மக்களுக்கு விளக்கப்படும் யாழ் சுகாதார அலுவலகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப் 30

'எயிட்ஸ்' நோய் சம்பந்தமாக பொதுமக்களுக்கு அடிப்படை அறிவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 'கல்வியூட்டும் திட்டம்'' (Educational Programme) ஒன்று ஆரம்பிக்கப் படும்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள இருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் 'எயிட்ஸ்' நோய் குறித்து முதலில் மருத்துவத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு விரிவான விளக்கங்கள் அளிக்கப்படும்.

அதனை அடுத்து அரசாங்க சார்பற்ற பொதுஸ்தாபனங்களைச் சேர்ந்த தொண்டர்களுக்கு 'எயிட்ஸ்' நோய் குறித்து விரிவான விளக்கங்கள் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒருவர் 'எயிட்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது ஊர்ஜிதமாகி உள்ளது. அவர் வெளிநாட்டில் பணிபுரிந்துவிட்டு வந்தவர்.

எயிட்ஸ் நோய் சம்பந்தமான விரிவுரைகள் நடத்தப்படுவதுடன் நோய் சம்பந்தமான விபரங்கள் அடங்கிய பிரசுரங்கள் புத்தகங்கள் போன்றவையும் விநியோகிக்கப்பட உள்ளன.

குடும்பத்திட்ட சங்கம் இந்த அறிவியல் திட்டத்தை அமுல் படுத்து[illegible] வழங்க முன்வந்திருக்கிறது. (இ-[illegible])

# இந்தியா எமது கரத்தை நம்பிக்கையுடன் பற்றிக்கொள்ளலாம்

## தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் கூறுகிறார்

வடமராட்சி, செப், 30

ஒப்பந்தத்தினால் தமிழர்களுக்கு நன்மை இல்லாததால் நாம் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது உள்ளோம் எனினும்இந்தியாவுக்கு நாம் இன்றும் நேசக்கரம் நீட்டுகிறோம் எமது கரத்தை அது நம்பிக்கையுடன் பற்றிக் கொள்ளலாம்

பருத்தித் துறையில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற தியாகி திலீபனின் தூபி திறப்பு விழாவில் பேசுகையில தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு கு. சிவானந்தசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கை-இந்திய ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தமே.

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட இளைஞர்களின் தியாகப்போராட்டங்கள் யாவும் எந்த வித அர்த்தமுமற்றவையாகிவிடப்போகின்றன.

இதனால் தான் நடைபெறப் போவதாகக் கூறப்படும் மாகாண சபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கின்றோம்

இப்படி அவர் கூறினார் (இ-160)

### வல்வையில்

வல்வெட்டித்துறை, செப். 30

வல்வை முத்துமாரி அம்மன் கோயிலில் இருந்து நெடியகாட்டுப் பிள்ளையார் கோயிலடியை நோக்கி நடைபெற்ற ஊர்வலத்தில் சுலோக அட்டைகளுடன் புலிக்கொடிகளும் காணப்பட்டன.

ஊர்வலத்துக்கு திரு. சே. பிரதீபன் தலைமை வகித்தார்.

வல்வைச்சந்தியில் 19 ஆம் திகதி முதல் திலீபனின் நினைவாக உண்ணாவிரதம் இருந்து வந்த இருவரின் உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டு அவர்களும் ஊர்வலமாக நெடியகாட்டுப்பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அங்கு திலீபன் நினைவாக நடை[illegible] [illegible]த்தில் சிறப்புச் சொற்பொழிவாளராக கு. சிவானந்தசுந்தரம் கலந்து கொண்டார்.

விழாவில் வ. இ. நடனசிகாமணி, வல்வை அனந்தராஜ் எஸ். செல்வேந்திரா. பண்டிதர் பரந்தாமன் ஆகியோரும் உரையாற்றினர். எஸ். ரவி நன்றி உரை வழங்கினர். (இ.160)

### இன்பருட்டியில்

இன்பருட்டியில் திலீபனின் ஞாபகார்த்த தூபியைத் தமிழ் ஈழ மக்கள் மன்றத்தலைவர் திரு கு. சிவானந்தசுந்தரம்திரை நீக்கம் செய்து வைத்தார்.

மேலும் திலீபனின் தூபியுடன் கரும்புலி கப்டன் மில்லர் கடற் புலி வெங்கடேஸ் ஆகியோருக்கும் அவர்களின் குடும்பத்தவர்களால் தூபி திரை நீக்கம் செய்யப்பட்டது

வைபவத்தில் எ. சித்திரவேல். எஸ். சண்முகசுந்தரம், ஐ. நந்தகுமார், த சந்திரதாஸ், செ பாலசிங்கம் ஆகியோரும் பங்குபற்றினர். (இ-160)

### நெல்லியடியில்

வடமராட்சி செப் 30

மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவின் மாபெரும் ஊர்வலம் நெல்லியடி முருகையன் கோவில் மாலிசந்தி போன்ற இடங்களுக்கு ஊடாக வதிரிமுத்துமாரி அம்மன் கோவிலடியை வந்தடைந்தது.

அங்கிருந்த உண்ணாவிரதிகளின் உண்ணாவிரதத்தை முடித்துவைத்து பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கு. சிவானந்தசுந்தரம் சிறப்புரை ஆற்றினார். (இ-160)

★

### வராத்துப்பளையில்

வடமராட்சி செப். 30

வடமராட்சிமாணவர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட திலீபன் தூபியை திரு. கு. சிவானந்தசுந்தரம் திரை நீக்கம் செய்து வைத்தார். (இ-160)

★

வடமராட்சி செப். 30

திலீபனின் நினைவாக பருத்தித்துறை சுப்பர்மட வாசிகளின் மூன்று நாள் உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டது.

திரு. த. திபாகரராசா தலைமையில் நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்தை கு. சிவானந்தசுந்தரம் முடித்து வைத்தார். (இ-160)

### 20 அடி உயர தூபி

வடமராட்சி, செப் 30

வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவும் மீனவர் சங்கங்களும் இணைந்து உருவாக்கிய திலீபனின் 20 அடி உயர நினைவுத்தூபியை ஆயிரக்கணக்கான பொது மக்கள் மத்தியில் கப்டன் நளனின் தாயார் திருபதி பகவதி கணபதிப்பிள்ளை திரை நீக்கம் செய்து வைத்தார்.

பருத்தித்துறையில் இந்தவைபவம் இடம் பெற்றது

இவ் விழாவின் போது தூபியை உருவாக்கிய சிற்பி எஸ். வேலுப்பிள்ளை சிவானந்தசுந்தரம் அவர்களால் மக்கள் சார்பில் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்.

சிறப்புத்தலைவர் திரு. எஸ். இராஜேந்திரா (தமிழ் ஈழமக்கள் மன்ற செயற்குழு உறுப்பினர்) தலைமையில் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் வல்வை அனந்தராஜ்,எஸ். தேவதாசன், க. பிறேமச்சந்திரன் (வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக்குழு) ஆகியோருடன் வாத்தகர் சங்கப் பிரமுகர்களும் உரையாற்றினர்.

உண்ணாவிரதிகள் அனைவர்களும் வடமராட்சிமாணவர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் குளிர்பானம் வழங்கப்பட்டது.

கூட்ட இறுதியில் மாணவர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் நாதன் நன்றி உரை வழங்கினார். (இ- 160)

### சண்டிலிப்பாய் இந்து ம. வி. பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் செப் 30

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு சே. சோமசேகரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசளிப்புப் பேருரை நிகழ்த்துவார்.

திருமதி சபாநாயகம் பரிசில்களை வழங்குவார்.

சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் கல்வி அதிகாரி திரு எஸ். தலஞ்செயன், ஷப்ரூ யுனிகோ நிதி நிறுவன நிர்வாக இயக்குநர் திரு ஈ சரவணபவன், திருமதி சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (இ-ச)

### நாளைய போட்டி

யாழ்ப்பாணம். செப் 30

யாழ்ப்பாணம் பரிசோவான் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி அதிபர் டாக்டர் இ செ. தேவசகாயம் தலைமையில் நடைபெறும். (ச)

### இன்று மெய்வல்லுநர் போட்டி

காரைநகர் வலந்தலை தெற்கு அ. மி த. கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று 30 ஆம் திகதி காலை 8 30 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. அ. கமலாகரன் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராகக் கொத்தணி அதிபர் திரு. அ. திரு நீலகண்டசிவம் கலந்து கொள்வார். (ச)

### தீவக அபிவிருத்தி நூல்

பலாலி, செப். 30

தீவுப்பகுதியின் அபிவிருத்தி சம்பந்தமான ஆய்வு நூல் ஒன்று மிக விரைவில் வெளிவரவுள்ளது.

''தீவக அபிவிருத்தி'' என்னும்பெயர்கொண்ட இந்நூலை 'தீவக அபிவிருத்திக் கழகம்' வெளியிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மல்லி கலந்த கோப்பி**

யாழ்ப்பாணம் முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லிக் கோப்பி இப்போது 100g பக்கட்டுக்களில்வெளிவருகிறது. 1 பக்கட்விலை 10/- ரூபா வியாபாரிகளுக்கு விசேடகழிவு கொடுக்கப்படும்.

**அண்ணு கோப்பிக் கடை,**
யாழ்ப்பாணம்.



# உதயன்

30 - 09 - 1988 வெள்ளிக்கிழமை



**சாயிபாபா ஸ்ரிக்கர்**

அண்ணு மோல்ட் டொபி லேபல்களில்50வெற்று லேபல்களைகொடுத்து 1' சாயிபாபா ஸ்ரிக்கர் அல்லது ஒரு கொப்பியை இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்:

**அண்ணு தொழிலகம்,**
இணுவில்.


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி ம. கௌசல்யா
30. 9. 1988

மகேந்திரராஜா தவலட்சுமி தம்பதிகளின் அருந்தவப்புதல்வி கௌசல்யா தனது முதலாவது பிறந்த தினத்தை 601/2, கே. கே. எஸ். ரோட் நாச்சிமார் கோவிலடி இல்லத்தில் இன்று வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா [ கட்டார் ], அம்மா, அம்மப்பா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பாமார், தெய்வேந்திரராஜா (ஓமான்), ராஜன் (பிரான்ஸ்), சந்திரன் (பிரான்ஸ்), ஞானம் (பிரான்ஸ்), ராணி அன்ரா (பிரான்ஸ்), தர்மராஜா மாமா (ஜேர்மனி), மாமி, முரளி, சசி (பருத்திக் துறை), தியாகராஜா மாமா, மாமி, பரணி, சுஜி (மாலிசந்தி), பாலசுந்தரம் மாமா, மாமி தனுஸ் (டுபாய்), ஜெயசூரியா மாமா, மாமி (கொழும்பு), ராசாமாமா, கணேஸ்மாமா (பிரான்ஸ்), சிவாமாமா (கனடா), ராசன் மாமா (பிரான்ஸ்), நந்தன் மாமா, சுட்டி மாமா, பூட்டிமார், கனகரத்தினம் அப்பப்பா, அம்மம்மா, குஞ்சுமாமி, சின்னன்மாமி, நவநீதன் சித்தப்பா, சித்தி, சுஜன் அண்ணு, கணேஸ்மாமா, மாமி, மயூரன், ராஜினி மற்றும் மாமாமார் யாபேரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று தீர்க்காயுசுடன் சீரும் சிறப்புமாக பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

நன்றி (6875)

## புற்று நோயாளர் விடுதி நிதிக்காக

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ்
மகாஜனக் கல்லூரி பிரிவு ஆதரவில்
ராஜன் இன்னிசைக் குழுவினர்
வழங்கும்

### 'தெய்வீக ராகங்கள்'

இடம்: தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி
காலம்: 2.10.1988 காலை 9 மணி,
மாலை 2.30 மணி.

வட மாகாணத்தில் ஓர் புற்று நோயாளர் விடுதி பூர்த்தியாக உங்கள் ஆதரவை நாடிநிற்கிறோம்.

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ்
மகாஜனக் கல்லூரிப் பிரிவு.

(6870)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இ. சந்திரகுமார்

தோற்றம்:- 26- 4- 1963
மறைவு:- 11- 10-1987

திதி:- 30- 9- 1988

பாசத்தின் உறைவிடமே!
பண்பின் குல விளக்கே
நெஞ்சு பொறுக்குதில்லை உம்
பிரிவை நினைக்கையிலே
சாந்தி பெறுவீராக.

இளையதம்பி சின்னம்மா,
கிருபா வீடியோ சென்ரர்,
குடும்பத்தினர்.

K. K. S. Road
சுன்னுகம். (C/336)

## பொது அறிவித்தல்

கொழும்பு – 12, கோட்டடி, மீருனியாத் தெரு, 29ஆம் நம்பரில் வசிக்கும் (சட்டத்தரணி திரு. வேலாயுதன் மனைவி) திருமதி பொன்னம்மா வேலாயுதனுகிய யான் அறிவிப்பது யாதெனில்:

சித்தங்கேணி - சங்கானை வீதியில் உள்ள எனது 'சல்லியவத்தை' என்னும் 9 பரப்பு 5 குளி விஸ்தீரணமான நிலத்தை சித்தன்கேணி வாசி திரு. நாகலிங்கம் சபாபதி நாதனுக்கு பராமரிப்புக்கு மாத்திரம் கொடுத்துள்ளேன்; ஆதலால், மேற்படி நிலத்தை எவருக்கும் விற்கவோ, ஈடுவைக்கவோ பரிமாறவோ எவ்வித அதிகாரமும் யான் கொடுக்கவில்லை என்பதாகும்.

பொ. வேலாயுதன்

(6869)


எமது நேற்றைய
புதிய வெளியீடுகள்

அர்ஜுன் - சுஹாசினி
**'சட்டம் ஒரு சதுரங்கம்'**

அடுத்த புதிய வெளியீடு:

கமலஹாசன் வழங்கும்
**'சூரசம்ஹாரம்'**

**குணம்**
**வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C 335)


## நன்றி நவில்கின்றோம்
## விண்ணக வாழ்வின் 31 ஆம் நினைவு தினம்



**அன்னை ஆபரணம் சலோமைப்பிள்ளை**

மண்ணகத்தில்: 1904 - 07 - 16
விண்ணகத்தில்: 1988 - 09 - 01

எமது அன்பு அன்னை ஆபரணம் சலோமைப்பிள்ளையின் இறுதியாத்திரையில் கலந்து கொண்டதோடு அன்னையின் பிரிவினுல் வருந்திய எமது துயரங்களைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமதுஇதய பூர்வமான நன்றியை எமது குடும்பத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது அன்பு அன்னையின் வழியாக இறைவன் திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் செய்த சகல கொடைகளுக்கும் நன்றியாக 1988-10-01 சனிக்கிழமை காலை 6. 15 மணிக்கு யாழ் பேராலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

தகவல்:-
வண. பிதா ஆபரணம் சிங்கராயர் (அ.ம.தி)
22/1 [illegible]
யாழ்ப்பாணம். (C/333)

கிட்டு......
(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தனர்.

விடுதலைப் புலிகளை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தது தவறு என்பதால் அது தொடர்பாக வழக்குப் பதிவு செய்வது பற்றி கிட்டுவுடன் ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது.

(ஒ-எ-4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திரு. கணபதி தியாகேசு
(காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் பகுதி ஊழியர்)

தோற்றம்: 7 - 1 - 1931
மறைவு: 31 - 8 - 1988

அயராது உழைத்து, பாசத்துடன் எம்மை வளர்த்து காத்திட்ட எம் அருமைத் தந்தையே! ஆண்டாண்டு சென்றிடினும் உங்கள் நினைவு எம் உள்ளத்தில் நின்று நீங்காதையா!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை (30-9-1988) வெள்ளிக்கிழமை இன்று காலை நடைபெற உள்ளது. அவரின் அன்புக்குரியவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.

ஆதியாமலை,
உடுப்பிட்டி. (C/338)

### வைத்திய சிரோன்மணி எமில் இன்னுசித்தம்பி

வைத்திய சிரோன்மணி எமில் இன்னுசித் தம்பி அவர்கள் 22 – 9 – 88 அன்று காலமானுர்கள். அன்னாரின் பூதவுடல் 1-10-88 சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து இன்னுசித்தம்பி ஞாபக சிற்றுலயத்திற்கு நல்லடக்க ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்.
சுகந்தன் இன்னுசித்தம்பி

இன்னுசித்தம்பி வளவு,
சில்லாலை. (6628)

### தகனக் கிரியை அறிவிப்பு
#### திருமதி இராசமலர் கந்தையா

முல்லாத்தனை தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி. இராசமலர்– கந்தையா (இளைப்பாறிய ஆசிரியை மகாஜனக்கல்லூரி) அவர்களது ஈமக்கிரியைகள் முன்பு அறிவித்தது போல் அல்லாமல் 30. 9. 1988 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

தகவல்
மான்
க. ரவிகுலன்

ஸ்ரேசன் வீதி,
தெல்லிப்பளை. (7104)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் இராஜகோபால்

காலஞ் சென்ற வைத்திலிங்கம் இராஜகோபால் அவர்களின் மனைவி திருமதி சிவபாக்கியம் சிவபதமடைந்து விட்டார். இவர் ஜெகதீஸ்வரி, சிவஜோதி, பரம்சோதி, ஞானசோதி, சுயம்சோதி (சாரதா) சிவசங்கரநாதன் (ராசபாலன்) நவரசதேவி, விஜயதெய்வேந்திரநாதன் (இந்திரன்) அவர்களின் அன்புத் தாயாரும், ஞானசம்பந்தர் (டாக்டர்), சந்திரபிரகாஷ் (பரிஸ்ரர்), திருஞானம் (வியாபாரம்), ஜெபமலர் காலஞ் சென்ற P. K. பிள்ளை, நடராஜா (மிருகவைத்தியர்) ஆகியோரின்மாமியாரும், பிரேமகுமாரி, புவனகுமாரி, நந்தகுமார், இந்திராணி, வனஜா, ஞானசேகரம், திலகவதி, புனிதவதி, சுபத்திரா, சௌரி, குணசேகரன், வரதராஜன், சுந்தரராஜ், கல்யாணி செல்வராஜ், மனேகரி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்

இவரின் ஈமக்கிரியைகள் 02- 10- 88 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி- 10 மணி வரையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல்வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்

தகவல்:
மக்கள், மருமக்கள்

சாந்திநிகேதன்,
6, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம். (6647)

### திரு. சின்னப்பு குமாரசுவாமி
(சோதிடர்)

கொக்குவில் மேற்கு சேணியடி ஒழுங்கை வாசி சோதிடர் திரு. சின்னப்புகுமாரசுவாமி 28. 9. 88ல் காலமானுர். இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், சுகாதாரப்பகுதி பரிசோதகர் சிவலிங்கம் (பிரான்ஸ்) செந்தில்ராசா (கனடா) சபேசராசா, மாதவநாயகி ஏழிசைநாயகி, ரெங்கநாயகி (பிரான்ஸ்) சிற்சபாநாயகி, செல்வநாயகி இவர்களின் அருமைத் தந்தையும், கிருபானந்த பாலினி கனகரத்தினம், காலஞ் சென்ற சண்முகலிங்கம், (பிரான்ஸ்) கலியுகவரதன், பிரான்ஸ் தனலட்சுமி, நாகதேவி (கனடா) ஆகியோரின் அன்புக்குரிய மாமனுரும் மயூரதன், ஜெயபிரசாத், விதுஷன், ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். ஈமச்சடங்கு 1-10-88 சனிக்கிழமை காலை 10மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத்தகனஞ்செய்யப்படுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
கு. சிவலிங்கம் (மகன்)
சி. கனகரத்தினம் (மருமகன்)

(6858)

### திரு. சு. தர்மலிங்கம்

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுன்னுகம் தச்சுவேலைத் தல (அரசினர்) மேற்பார்வையாளருமான திரு. சுப்பர் தர்மலிங்கம் 28-9-88 இல் காலமானுர் அன்னார் குணமணியின் அன்புக் கணவரும் தியாகலிங்கம் [ஜேர்மன்] லீலாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், S.N இராசநாயகம் (படவரைஞர், புகையிரத திணைக்களம்), யோகேஸ்வரி (ரீட்டா) (ஜேர்மன்) ஆகியோரின் மாமனுரும், நாகலிங்கம், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லம்மாவின் அன்பு மைத்துனரும் தனஞ்சன், ஜனு, சயந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக 1-10-88 சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கோப்பாய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. N. இராசநாயகம்
(மருமகன்)

காளிகோயிலடி,
கோப்பாய் வடக்கு.

(6874)

### சகாதேவன் செல்வகுமார் (கீதன்)

நல்லூரைச் சேர்ந்த சகாதேவன் செல்வகுமார் (கீதன்) அகால மரணமானுர்; ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சகாதேவன்

வாலை அம்மன் கோவிலடி,
திருநெல்வேலி. (6876)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible]லர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 30- 09- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 30th September 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org